திருச்சி சிவா எம்.பி.

பிளாஸ்டிக் பொருட்கள் தடை தொடர்பான ஆலோசனை கூட்டம்

திருச்சி, அக்.28– ஒரு முறை பயன்படுத்தி குப்பையில் போடப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு வருகிற ஜனவரி மாதம் 1-ந்தேதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான திருச்சி மண்டல அளவிலான ஆலோசனை கூட்டம் தில்லைநகரில் இந்திய மருத்துவ கழகத்தில் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு சென்னை மாசு கட்டுப்பாட்டு வாரிய கூடுதல் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் செல்வன் தலைமை தாங்கி பேசினார். அப்போது உள்ளாட்சி அமைப்புகளின் பணிகளையும், பொதுமக்களின் பொறுப்புகளையும் எடுத்துரைத்தார். கூட்டத்தில் திருச்சி மாநகர ஆணையர் ரவிச்சந்திரன் கலந்து கொண்டு திருச்சி மாநகராட்சியில் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை குறைக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை விளக்கினார். கூட்டத்தில் திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், அரியலூர், பெரம்பலூர், கரூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள நகராட்சி ஆணையர்கள், ஊராட்சிகளின் செயல் அலுவலர்கள், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள், பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கும் தொழிலக உரிமையாளர்கள், மாற்றுப்பொருள் தயாரிக்கும் தொழிலக உரிமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் தனியார் சிமெண்டு நிறுவனத்தினர் தங்களது நிறுவனங்களில் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்துவதை விளக்கி கூறினர். முடிவில் மாசு கட்டுப்பாட்டு வாரிய திருச்சி மண்டல இணைத்தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் குமார் நன்றி கூறினார்.